2. தகவல் கோரல்.

(ஆ) துணை வினாவிற்கு விடையாக அவை முன் வைக்கப்பெற்ற அறிக்கை மீது வினா எழுப்புதல்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் ஆணைக்கிணங்க, தொழிலாளர் நலத்துறை அமைச்சர், நான் 17-3-1982-ஆம் தேதி கேட்ட கேள்விக்கு இன்று அறிக்கை தந்திருக்கிறார். அதன்மேலும் கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் அந்த மாதிரி அறிக்கையை சீக்கிரம் வைக்கச் சொல்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தொழிலாளர் நல அமைச்சர் அவருடைய கேள்வியை ஒட்டி அறிக்கை வைத்திருக்கிறார். அதன்மேல் கேள்வி கேட்க முடியுமா என்பது கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதன்மேல் கேட்க முடியாது. அதைப் படித்து, ஆராய்ச்சி செய்து, கேள்வி எழுதி அனுப்பி, ஒத்துக்கொள்ளப்பட்டு, அதற்குப் பிறகுதான் கேள்விகள் வரும்.

(இ) முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்சினை.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஓய்விலே இருக்கிறார், கடந்த 15ஆம் தேதியிலேயிருந்து. டி.எல்.ஓ. இல்லை, டி.எம்.ஓ. இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டெக்னிக்காலிட்டீஸ் எல்லாம் இங்கே கேட்டு ஒன்றும் நடக்காது. (குறுக்கீடு) ஒரு ஆபீசர் போனால் அதையெல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருப்பதா? அதற்கெல்லாம் பதில் எதிர்பார்க்காதீர்கள், நல்லதல்ல.

3. அறிவிப்பு.

(அ) ஒலிபெருக்கிகளைச் சரியான முறையில் பயன்படுத்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது வசதிக்கென, இந்த அவையில் இயங்கி வந்த 111 பழைய ஒலிபெருக்கிகளுக்குப் பதிலாக, 155 கொக்குதலை ஒலிபெருக்கிகள் ரூபாய் ஒரு இலட்சத்து ஒன்பதாயிரம் செலவில் பொருத்தப் பெற்றுள்ளன. ஆயினும் உறுப்பினர்கள் ஒலிபெருக்கியினை ஆதாரமாக வைத்து எழுந்திருப்பதாலும் அவைகளை திருகி வளைத்துக் கொண்டிருப்பதாலும் அவைகள் அடிக்கடி பழுதுபடுகின்றன. இதனால் இதுவரை நான்கு ஒலிபெருக்கிகள் பழுதாகி விட்டன மேலும் அவற்றில் ஒரு ஒலிபெருக்கி பழுதுபட்டால்கூட